# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

24.08.2020 திங்கட்கிழமை


# அங்கஜனை அமைச்சராக்கி சம்பந்தன், விக்கிக்கு முடிவு



## விமலின் வியூகம் இது

கொழும்பு, ஓகஸ்ட் 24

அங்கஜனுக்கு அமைச்சுப் பதவியை வழங்கி அவரைப் பலப்படுத்தினால் சம்பந்தன், விக்னேஸ்வரன் போன்றவர்களின் அரசியல் பயணத்தை தோற்கடிக்கக் கூடியதாக இருக்கும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார். 2

## புதினம் தெரியுமோ?

இந்தமுறை மொட்டுக்கட்சி அமோக வெற்றி பெற்றிருந்தாலும் அந்த வெற்றி எத்தனை நாளுக்கு நீடிக்கும் என்ற சந்தேகம் மெல்ல மெல்ல எழத் தொடங்கி விட்டது. பல இடங்களில் மொட்டோடு கூட்டணி அமைத்த சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் மைத்திரி தலைமையில் தனித்து இயங்க முடிவெடுத்திருக்கிறார்களாம். அமைச்சரவையில் சுதந்திரக் கட்சியினருக்கு உரிய அங்கீகாரம் கொடுக்காததோடு, மைத்திரியையும் ஆளும் கட்சி கிஞ்சித்தும் கண்டுகொள்ளவில்லை. இதனால் மைத்திரி அணி கடும் 2

## வீழ்ந்தது தங்கம்!!

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணத்தில் தங்கத்தின் விலை இன்று மீளவும் ஆயிரம் ரூபாவால் குறைவடைந்துள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக சர்வதேச பொருளாதார சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தங்கத்தின் விலை 2

## 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு இன்றுமுதல் நியமனம்!!

கொழும்பு, ஓக. 24

பட்டதாரி நியமனங்கள் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்க 25 மாவட்டங்களில் உள்ள மாவட்ட செயலகங்க 2

## சிறைச்சாலைகளுக்கு பாதுகாப்பு பலப்பட்டது

கொழும்பு, ஓக. 24

சில சிறைச்சாலைகளுக்கு இன்று முதல் சிறப்பு அதிரடிப் படையின் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கொழும்பு விளக்கமறியல், மெகசின் மற்றும் வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளுக்கு இவ்வாறு சிறப்பு 2

## பேர்த்தியின் கொண்டாட்டத்தில் தாத்தா இறப்பு

கிளிநொச்சி, ஓக. 24

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் இடம்பெற்ற தனது பேர்த்தியின் பூப்புனித நீராட்டு விழாவில் பங்குகொண்ட தாத்தா திடீரென கீழே விழுந்து உயிரிழந்தார். 74 வயதுடைய மாணிக் 2

## மீள்குடியேற்றத்துக்கு காணிகளை விடுவியுங்கள்!

புதிய இராணுவத் தளபதியிடம் மாவட்டச் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டாரா, யாழ்ப்பாண மாவட்டச் 2

## பானைக்குள் இருந்து கசிப்புப் பைகள் மீட்பு

புதுக்குடியிருப்பு, ஓக. 24

புதுக்குடியிருப்பில் வீடொன்றின் முற்றத்தில் புதைக்கப்பட்ட பானைக்குள் இருந்து அதிகளவான கசிப்புப் பைகள் மீட்கப் 2



## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

திருகோணமலை, ஓக. 24

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன்தீவு பகுதியில் 7 வயதுச் சிறுவனொருவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்தான். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் 2

## தவறான முடிவெடுத்து யுவதியொருவர் சாவு!!

கொடிகாமம், ஓக. 24

தவறான முடிவு எடுத்த யுவதி ஒருவர் தூக்கில் தொங்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் வரணி வடக்குப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. தனியார் 2

## ஐ.தே.க. தலைமைக்கு கருஜயசூரிய தயாராம்

கொழும்பு, ஓக. 24

ஐ.தே.கவின் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தயாராக இருக்கிறேன் என முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய அறிவித்துள்ளார். இது தொடர்பில் கரு ஜெயசூரியா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். தலைமைத்துவத்தை ஏற்கத் தயாராக இருக்கும் தனது நிலைப்பாட்டைக் கட்சியின் தலைவர் 2

## தமிழ்க் கூட்டமைப்பை தமிழர்களே வீழ்த்துவர்

*அமைச்சர் பத்திரண தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிப்பதற்காக எதிர்காலத்தில் வடக்கு - கிழக்கில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களும் ஓரணியில் திரள்வார்கள் என அமைச்சரவை இணைப் 2

## புதினம் தெரியுமோ?

அப்செட். இந்த நேரத்தில் மைத்திரிக்கு தூண்டில் போட்டிருக்கிறார் சஜித். ஏற்கனவே சஜித் மீது மைத்திரிக்கு நல்ல வரைப்பாடு. ஒக்ரோபர் சதியில் ரணில் தலைமையிலான அரசை மைத்திரி கலைத்துவிட்டு, சஜித்தையே பிரதமராக்க எண்ணினார். ஆனால் சஜித் மறுத்தமையால் மகிந்தவைப் பிரதமராக்கி அவமானப்பட்டிருந்தார் மைத்திரி.

இப்போது காலம் மாறிவிட்டது,. சஜித் எதிர்க்கட்சித்தலைவராகிவிட, மைத்திரி வெறும் 16 உறுப்பினர்களோடு நிற்கி றார். இப்படி நடுத்தெருவில் நிற்கும் மைத்திரி அணியையும், பாகன் இல் லாமல் தடுமாறும் யானைக்கட்சியை யும் தனக்கும் கீழ் ஒருங்கிணைத்தால் மாகாண சபையில் மொட்டை கருகச் செய்துவிடலாம் என்பது சஜித்தின் கணக்கு. இந்த மெகா கூட்டணியில் ஜே.வி.பியையும் இணைக்கப் பேச்சுக்கள் நடக்கின்றனவாம்.

அதை விட மொட்டுக் கட்சிக்குள்ளேயே அமைச்சுப் பதவி கிடைக்காத சிலரும் சஜித் பக்கம் தாவ நினைக்கின்றனராம். 9 ஆவது நாடாளுமன்றம் ஒருமுறை மட்டுமே கூடிய நிலையில், இப்படி பரமபத விளையாட்டுக்கள் தொடங்கி யுள்ளன. போகப் போக இன்னும் என்னென்ன காய்நகர்த்தல்களோ யார் கண்டது?

– பட்சி

## அங்கஜனை அமைச்சராக்கி...

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'கொழும்பில் வாழ்ந்து, ரோயல் கல்லூரியில் பயின்று, பிள்ளைகளை சிங்களவர்களுக்கு மணம் முடித்துவைத்த விக்னேஸ்வரன், பூர் வீகம் பற்றியும், பூர்வீக மொழி குறித் தும் கதைக்கின்றார். இவ்விடயங்களில் அவருக்கு அந்தளவுக்கு பற்று இருக்கு மானால் எதற்காக பிள்ளைகளை சிங்களவர்களுக்கு திருமணம் முடித்துவைக்க வேண்டும்? எனவே, இவையெல்லாம் பொய் நாடகம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சம்பந்தனை விடவும் தான்தான் தமிழ் தேசியவாதி, வீரன் என்பதை காட்டிக் கொள்வதற்கான முயற்சியிலேயே விக்னேஸ்வரன் இறங்கியுள்ளார். அதற்காகவே அடிப்படை வாதத்தைக் கையில் எடுத்துள்ளார். உலகில் பழமை யான மொழி தமிழ் என்றெல்லாம் கூறினால் இலகுவில் மக்களைக் கவர்ந்து விடலாம் என எண்ணியே அவ்வாறு உரையாற்றியுள்ளார்.

வடக்கு மக்கள் இன்று பிரிவினைவாதத்தை நிராகரித்துள்ளனர். 16ஆக இருந்த கூட்டமைப்பின் எம். பிக்கள் எண்ணிக்கை 10ஆக குறைவ டைந்துள்ளது. யாழ். மாவட்டத்திலி ருந்து சுதந்திரக்கட்சி ஊடாக நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவாகியுள் ளார். அதேபோல் ஹக்கீம் போன்றவர்க ளின் அழுத்தம், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அதாவுல்லா வெற்றிபெற் றுள்ளார். இதன்மூலம் தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிவினைவாதத்தையும், அடிப்ப டைவாதத்தையும் நிராகரிக்கின்றமை புலனாகின்றது. எனவே, அங்கஜனுக் கும், அதாவுல்லாவுக்கும் அமைச்சுப்பத விகளை வழங்கவேண்டும். நடுநிலை யாக செயற்படக்கூடிய அரசியல்வாதி களை நாம் பலப்படுத்தவேண்டும். அப்போ து தான் சம்பந்தன், விக்னேஸ்வரன், ஹக்கீம், ரிஷாட் போன்றவர்களின் இனவாத, அடிப்ப டைவாத அரசியலை தோற்கடிக்கக் கூடியதாக இருக்கும்.' என்றார். (ம-44)

## போத்தியின்...

கம் நடேசன் என்பவரே உயிரிழந்தவராவார். மயக்கமடைந்து கீழே விழுந்தவரை உடனடியாக மருத்துவமனையில் சேர்த் தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டனர். (ம-316)

## பானைக்குள் இருந்து...

பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டா ரப்பகுதியில் வீடு ஒன்றில் கசிப்பு வியாபாரம் இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தக வலை அடுத்து அந்த வீட்டுக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி தலைமையிலான குழுவினர் வீட்டு முற்றத்தில் மண்குடம் ஒன்று புதைக்கப்பட் டிப்பதை இனங்கண்டு அதைச் சோதனையிட் டபோதே மேற்படி கசிப்புப் பைகள் மீட்கப்பட்டன. (ம-19)

## வீழ்ந்தது...

நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இந்த மாத ஆரம்பத்தில் தங்கத் தின் விலை ஒரு பவுண் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாயைத் தொட்டது.

இந்த நிலையில் கடந்த இரண்டு வாரங்களாக தங்கத்தின் விலை சரிவைக் கண்டுள்ளது. யாழ்ப்பா ணத்தில் இன்று திங்கட்கிழமை 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை 92 ஆயிரத்து 600 ரூபாவாக விற்பனையானது. 24 கரட் தூய தங்கம் இன்று பவுண் ஒன்று ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனை யானது. (ம)

## கிணற்றில் வீழ்ந்து...

இரவு இடம்பெற்றது. கிண் ணியா – பூவரசன்தீவுப் பகுதி யைச் சேர்ந்த முஹம்மது நிஜாம் முஹம்மது அஸ்மி என்ற சிறு வனே இவ்வாறு உயிரிழந்தான். குறித்த சிறுவனும் 11 வயதே யான இன்னொரு சிறுவனும் விளையாடிக் கொண்டிருந்த போது 7 வயதுச் சிறுவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்தான். அவனுடன் விளையாடிய 11 வயதுச் சிறுவன் தகவல் வழங்கி யதை அடுத்து கிணற்றுக்குள் இருந்து சிறுவன் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதிலும் அவன் ஏற்கனவே உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம)

## பட்டதாரிகளுக்கு...

ளுக்கு இன்று முதல் நியமனக் கடிதங்கள் அனுப்பப்படும் என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கடிதங்கள் பிரதேச செயலர்களுக்கு அனுப்பப்பட்டு செப் ரெம்பர் 2ஆம் திகதி அந்தந்த பிரிவுகளின் பட்டதாரிகளுக்கு பிரதேச செயலர்களால் ஒப்படைக்கப்படும் என்று பொது நிர்வாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னர் மேலும் 10 ஆயிரம் நியம னங்கள் வழங்கப்படும் என்றும் பல்வேறு காரணங்களால் முத லில் நிராகரிக்கப்பட்ட தகுதி வாய்ந்த பட்டதாரிகளை உள் வாங்கி அந்த நியமனங்கள் வழங்கப்படும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ம)

## மீள்குடியேற்றத்துக்கு....

செயலர் க.மகேசனை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று காலை சம்பிரதாயபூர்வமாக சந்தித்துக் கலந்துரையாடினார்.

மதத் தலைவர்களைச் சந்தித்த பின்னர் மாவட்டச் செயலரை அவர் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், மக்களின் மீள் குடியமர்வுக்காக காணிகளை விடுவிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்களையும், விடயங்களையும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண் டார். அத்துடன் இராணுவத்தினர் முன்னெடுத்து வரும் சமூகப் பணிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்தார். (ஓ,5)

## சிறைச்சாலைகளுக்கு...

அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள் ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள் ளார். (ம)

## தவறான.....

நிறுவனம் ஒன்றில் பணி புரிந்துவரும் பெண் யாரோ ஒருவருக்குப் பணம் கொடுத் துள்ளார். கொடுத்த பணத்தை பெற்றுக்கொண்டவர் திருப்பிக் கொடுக்கவில்லை. அதனால் தற்கொலை செய்கி றேன் என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. மேலதிக விசாரணை களை கொடிகாமம் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம-9,159)

## தமிழ்க் கூட்டமைப்பை...

பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற உரை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அடிப்படைவாத கட்சிகள் மற்றும் தலைவர்களால் முன்வைக்கப்படும் கருத்துகள் தொடர்பில் நாம் அலட்டிக் கொள்ள தேவையில்லை. அவை எல்லாம் அரசியலை மையப்ப டுத்திய அறிவிப்புகளாகும். இது மக்களுக்கும் தெரிந்துவிட்டது. இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஏனைய அடிப்படைவாத கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு குறைந்தி ருக்கின்றது. இது சாதகமானதொரு விடயமாகும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அடிப்படைவாத கட்சிகளை தோற்கடிப்பதற்கு வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்துத் தமிழ் மக்களும் எதிர்காலத்தில் ஒன்றுதிரள்வார் கள் என நம்புகின்றேன்' என்றார்.

அதேவேளை, இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இரா ஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச, 'விக்னேஸ்வரனின் நாடாளு மன்ற உரை டயஸ்போராக்களுக்கானது, வடக்கு மக்கள்கூட அவர் கேட்பதைக் கோருவதில்லை. எனவே, அடுத்த நாடாளு மன்ற கூட்டத்தொடரில் கடும் எதிர்ப்பை வெளியிடுவோம்' என்றார். (ம-44)

## ஐ.தே.க. தலைமைக்கு....

ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அறிவித்து விட்டார் என்றும் தெரிவித் துள்ளார்.

ஓகஸ்ட் 14ஆம் திகதி, ரணில் விக்கிரமசிங்கவிற்கும், கட்சியின் செயற் குழுவிற்குமிடையில் நடந்த கலந்துரை யாடலில், கட்சிக்கு புதிய மற்றும் 'இளம்' தலைவரை தெரிந்தெடுப்பதென உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. முன்னாள் எம்.பிக்கள் ரவி கருணநா யக்க, தயா கமகே, அகிலவிராஜ் காரிய வாசம், வஜிர அபேகுணவர்தன, அர் ஜுன ரணதுங்க, நவீன் திசாநாயக்க மற்றும் ருவன் விஜேவர்தன ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதிலாக இளம் தலைவர்களாக பரிந்துரைக்கப்பட்டனர்.

அடுத்த 6 மாதங்களுக்கு ரணில் விக்ரமசிங்க தலைவராக நீடிப்பார் என்றும், வரவிருக்கும் மாகாண சபை தேர்தல்களுக்குப் பிறகுதான் தனது பதவியில் இருந்து விலகுவார் என்றும் பின்னர் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் கருஜயசூரியாவின் அறிக்கை வெளியாகியுள்ளது. (ம)

# பாதுகாப்பற்ற ரயில் கடவை; சீரமைத்துத் தரக் கோரிக்கை

கிளிநொச்சி , ஓக.24



கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இந்திராபுரம் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் பாதுகாப்பற்ற ரயில் கடவையைச் சீரமைத்துத் துருமாறு கிராம மக்கள் கோரியுள்ளனர்.

மேலும், கடந்த 2018 இல் மீள்குடியேற்றப்பட்ட இக் கிராமத்தில் சுமார் 200 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்தக் குடும்பங்களில் 100 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் உள்ள நிலையில் அவர்கள் ஏ9 வீதி கடந்து காணப்படும் வேம்போடு கேணி மற்றும் பளை பாடசாலைகளிலேயே கல்வி கற்று வருகின்றனர். பாடசாலை சென்று வர ரயில் கடவையைக் கடந்துதான் சென்றுவர வேண்டும். இதனால் தினமும் தாம் அச்சத்துடன் இருப்பதாகவும், தமது கிராமத்தில் இருந்து அவசர நோயாளிகளைக் கொண்டு செல்வதற்கு சுமார் 2 கிலோமீற்றர் சுற்றித்தான் செல்ல வேண்டி உள்ளது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை காலமும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், தற்போது உள்ள பாதுகாப்பு கடவையும் உடைந்த நிலையில் உள்ளதெனவும் குற்றம் சுமத்தும் மக்கள், அந்த ரயில் கடவை மீள் குடியேற்றத் துக்கு முன்னர் மிதி வெடி அகற்றும் பணியாளர்களால் போடப்பட்டதெனவும் தெரிவிக்கின்றனர். எனவே இந்த பாதுகாப்புக்கடவையை கால தாமதமின்றி சீரமைத்தும் பாதுகாப்பு ஊழியர் இல்லாவிடில் சமிக்ஞைகள் ஏதாவது போட்டுதருமாறும் இந்திராபுர கிராம மக்கள் கோருகின்றனர். (ரி3-6-113)





## மன்னார் மறைமாவட்ட ஆயரை சந்தித்தார் ரிஷாத் பதியுதீன்

மன்னார், ஓக.24

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகையை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆயர் இல்லத்துக்குச் சென்று சந்தித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனுடன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் முது நபீனும் சென்றிருந்தார்.

இதன்போது குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிநேகபூர்வமாக சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகையுடன் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளாரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ரி2-56)

## பி.சி.ஆர். சோதனையை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக.24

விமான நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகளை இரு மடங்காக அதிகரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான வசதிகள் விமான நிலையத்திற்குள் முன்னெடுக்கப்படவுள்ளது என விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க தெரிவித்துள்ளார். (ரி1)



## கடற்கரையை தூய்மைப்படுத்தும் செயற்றிட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக.24

சாட்டி கடற்கரை பிரதேசத்தைத் தூய்மைப்படுத்தும் செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு மற்றும் யாழ்ப்பாண வட்ட மேசை அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தச் செயற்றிட்டத்தில் யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தினரும் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வட்ட மேசை அமைப்பானது அண்மைக்காலங்களில் இலங்கையின் பல மாவட்டங்களில் உள்ள கடற்கரைப் பிரதேசங்களைத் தூய்மைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த நடவடிக்கையின் மூலம் பெருமளவான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் உட்பட பல்வேறு சூழலுக்கு மாசு ஏற்படுத்தக்கூடிய பொருள்கள் மீட்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன. (ரி2-20)

## கடலில் மூழ்கி மாணவன் சாவு

நீர்கொழும்பு, ஓக.24

பாடசாலை மாணவரொருவர் நீர்கொழும்பு பலவத்துறைக் கடலில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளார். குருநாகல் தம்பதெனியவைச் சேர்ந்த முஹமட் அப்கர் என்ற உயர்தர வகுப்பு மாணவனே உயிரிழந்தவராவார். வறுமை காரணமாக விடுமுறையில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக சிறிய ரக லொறியில் உதவியாளராகச் சென்ற இவர் நேற்று மாலை பலவத்துறை கடலில் குளிக்கச் சென்றபோது உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. மாணவனின் உடல் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி1)



## மண்ணித்தலை பகுதியில் மரக்குற்றிகள் மீட்பு

கிளிநொச்சி ஓக,25

பூநகரி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மண்ணித்தலை பகுதியில் அனுமதிப்பத்திரமின்றிக் கடத்தப்பட்ட மரக்குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் மரங்கள் கடத்தப்படுகின்றன எனப் பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் மண்ணித்தலைப் பகுதியில் வைத்து 10 முதிரை மரக்குற்றிகளையும் அவற்றை ஏற்றி வந்த வாகனத்தையும் கைப்பற்றினர். இதையடுத்து வாகனச் சாரதி வாகனத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளும், வாகனமும் பூநகரி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. தப்பிச் சென்ற சாரதியைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (ரி1-6)






யாழ்ப்பாணம் நர்மதா கோல்ட் சென்ரரின் அனுசரனையில், குருதிக் கொடை முகாம் நேற்று காலை அவர்களது அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் 75ற்கும் மேற்பட்ட குருதிக்கொடையாளர்கள் கலந்து கொண்டனர். (ரி3-213)

# அமெரிக்காவால் இலங்கைக்கு 6 மில்லியன் டொலர்கள்

கொழும்பு, ஒக.24

கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைகளிலிருந்து மீள இலங்கைக்கு 6 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.



இவ்வாறு வழங்கப்பட்டுள்ள உதவித் தொகையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் பெண்களின் பொருளாதார பங்களிப்பை அதிகரிப்பதற்கும் 2 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை அரசாங்க சுகாதார அமைப்புகளுக்கும் தொற்று கண்டுபிடிப்பு மற்றும் கண்காணிப்பை செயற்படுத்தவும் 1.3 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொரோனா நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக சேவைகளை அதிகரிக்கவும், சமூக ஒத்திசைவுக்கான குறிப்பிட்ட அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்யவும், எதிர்மறையான பொருளாதார தாக்கங்களைத் தணிக்கவும் மிகுதித் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. என இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று ஏற்பட்டதில் இருந்து சுமார் 1.6 பில்லியன் டொலரை சர்வதேச அபிவிருத்தி, அவசர சுகாதாரம், மனிதாபிமான, பொருளாதார மற்றும் மேம்பாட்டு உதவிகளுக்காக அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் போன்றன தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# கார்– லொறி விபத்து: இருவர் உயிரிழப்பு; நால்வர் படுகாயம்

குருநாகல், ஒக.24

கண்டி– குருநாகல் பிரதான வீதியின் கொஸ்கொட பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கார் ஒன்று கொள்கலன் லொறியொன்றுடன் மோதிப் பின்னர் மேலும் ஒரு கார் மீது கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் இரு கார்களில் பயணித்த ஐவர் உட்பட லொறியின் சாரதியும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் கலகெதர மற்றும் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், இரண்டு வயது சிறுமியும் அவரது தந்தையும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் . (ரி1)

# 180 இலங்கையர்கள் நாட்டை வந்தடைவு

கொழும்பு,ஒக.24

கொரோனா வைரஸ் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் பஹ்ரைனில் சிக்கியிருந்த மேலும் 180 இலங்கையர்கள் நேற்று இரவு நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் பி.சி. ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகள் வெளிவந்தவுடன் அவர்களை முகாம்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# கொரோனா தொற்றாளர்கள் 2,953 ஆக அதிகரிப்பு

கொழும்பு,ஒக.24

இலங்கையில் ஆறு புதிய கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால் நாட்டின் தற்போதைய கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 2,953 ஆக அதிகரித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து திரும்பிய மூன்று பேரும், மலேசியாவிலிருந்து திரும்பிய இரண்டு பேரும் மற்றும் கென்யாவிலிருந்து வந்த ஒருவருமே இவ்வாறு புதிய கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் 136 கொரோனா தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுள் இருவர் வெளிநாட்டினராவர். சந்தேகத்தின் பேரில் 55 பேர் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர். தொற்றுக்குள்ளான 2,805 பேர் குணமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 12 ஆக அதிகரித்துள்ளது. (ரி2)

# 24மணி நேரத்தில் 1141 பேர் கைது!

கொழும்பு, ஒக.24

கடந்த 24 மணித்தியாலங்களில் மேல் மாகாணத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் 1141 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மேல் மாகாணப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேல் மாகாண பொலிஸார் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக 465 சந்தேகநபர்களும், 477 பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய பிற குற்றச்செயல்களில் ஈடுபட்டதற்காக 98 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ரி1)

# விபத்தில் தந்தை உயிரிழப்பு மகன் படுகாயம்

கொழும்பு, ஒக.24

தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். ஒட்டமாவடி காவத்தமுனையிலிருந்து மீன் கொள்வனவுக்காக முச்சக்கர வண்டி ஒன்றில் தெஹியத்தகண்டிக்குச் சென்ற தந்தை மகனுடன் எதிரே வந்த கூலர் வாகனம் ஒன்று மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது எனத் தெரியவந்துள்ளது. விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த ஓட்டமாவடிகாவத்தமுனையைச் சேர்ந்த எஸ்.எம்.சின்னத்தம்பி (வயது 60) என்பவர் உயிரிழந்துள்ளார். முச்சக்கர வண்டியை செலுத்திச் சென்ற அவரது மகன் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி1)



மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம் முகாமில் கண் பார்வையில் குறைபாடு காணப்பட்ட 123 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. கழகத் தலைவர் லயன் இ.கோகுலன் தலைமையில் நடைபெற்ற முகாமில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் பொது மருத்துவம் போன்ற பரிசோதனைகள் நடத்தப்பட்டன. (ரி3-9)

# மழைக்கு சாத்தியம்

கொழும்பு,ஒக.24

நாட்டின் பல இடங்களில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் இன்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் திருகோணமலை, பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இதேநேரம், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.(ரி2)

# உக்காத பொருள்களுக்கு தடை

## மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை யோசனை

*கொழும்பு, ஓக.24*

இலங்கையில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் உக்காத பொருள்களுக்கு தடைவிதிக்க மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது. இதனடிப்படையில் ஒருமுறை பயன்படுத்திவிட்டு வீசப்படும் உக்காத பொருள்கள் மற்றும் தயாரிப்பு பொதிகளைப் பயன படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட வுள்ளது. இது தொடர்பிலான யோசனை ஒன்று எதிர்வரும் அமைச் சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்ப டவுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் திடக்கழிவு நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக நாட்டில் ஏற்பட் டுள்ள பெரும் சுற்றுச் சூழல் பாதிப் புக்கு இதுவே காரணம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ரி2)

# காதலுக்கு எதிர்ப்பு இளம் பெண் உயிர்மாய்ப்பு

*சிலாபம், ஓக.24*

20 வயதுடைய இளம் பெண் ஒருவர் சிலாபத்தில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். பெண்ணின் தாயார் மகளின் காதல் தொடர்பை நிறுத்துவதற்காக அவரது கையடக்கத் தொலைபேசியை மறைத்து வைத்த காரணத்தினால் மகள் இவ்வாறு மரணத்தைத் தேடிக் கொண்டுள்ளார். சிலாபம், இனிகாட வில பிரதேசத் தைச் சேர்ந்த ஹஷஜ ஊஜ பியுமிக்கா என்ற இளம் பெண்ணே உயிரிழந்த வர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மகளின் காதல் தொடர்பை நிறுத்து மாறு தாயார் பல முறை அவரை எச்சரித்த போதிலும் தொடர்ந்து கையடக்க தொலைபேசியில் காதல னுடன் மகள் பேசியுள்ளார். இதனால் கையடக்க தொலைபேசியை தாயார் மறைத்து வைத்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி காலை அவரது கையடக்க தொலைபேசிக்காக தாய்க்கும் மகளுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனால் மனமுடைந்த மகள் தனது உடலுக்கு தீ வைத்துக் கொண்டுள் ளார். படுகாயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (ரி2)



# தீவிரமாக பரவும் எலிக்காய்ச்சல்

*கொழும்பு, ஓக.24*

இலங்கையில் எலிக்காய்ச் சல் தீவிரமாக பரவி வருவ தாக தொற்று நோய்ப் பிரிவு எச்சரித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரை யான காலப்பகுதியில் 4554 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. இதேவேளை இந்த காலப்பகுதியில் 37 பேர் எலிக்காய்ச்சலினால் உயிரி ழந்துள்ளனர் எனவும் தொற்று நோய்ப் பிரிவின் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும்,இலங்கையில் அதிகமாக எலிக்காய்ச்சலி னால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக இரத்தினபுரி மாவட்டம் பதிவாகியுள் ளது. அங்கு பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை 1146 ஆக அதிகரித்துள்ளது. மொனராகலை மாவட் டத்தில் மாத்திரம் இதுவரை எலிக்காய்ச்சலினால் பாதிக் கப்பட்ட நோயாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை. மக்கள் இது தொடர்பில் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ரி3)

# சிங்கப்பூரில் மாணவன் சாவு; விசாரணை ஆரம்பம்

*சிங்கப்பூர் சிட்டி, ஓக.24*

சிங்கப்பூரில் மர்மமான முறையில் உயிரிழந்த இலங்கை மாணவன் தொடர்பில் அந்நாட்டு அதிகாரி கள் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. மணில்கா பொன்சேகா என்ற 21 வயது இலங்கை மாணவன் கடந்த 12ஆம் திகதி உயிரிழந்த நிலையில், கடந்த 16ஆம் திகதி சடலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. மாணவனின் மரணத்தை சிங்கப்பூரில் உள்ள இலங்கை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

உயிரிழப்புக்கான உண்மையான காரணத்தை அறிய சிங்கப்பூர் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவரின் குடும்பத்தினரின் தகவல்படி, அந்த மாணவன் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி தண்ணீர் போத்தலைப் வாங்க அருகிலுள்ள கட்டடத்திற்குச் சென்றமை அங்கிருந்த சி.சி. டிவியில் பதிவாகியுள்ளது. அது தொடர்பில் விசாரணை செய்த அதிகாரிகள் மாணவனுக்கு 5000 அமெரிக்க டொலர் அபராதம் அல்லது ஆறு மாத சிறை விதித்த னர். அபராத தொகையைச் செலுத்த முடியாமையினால், சிறைக்குச் செல்வதற்கு அஞ்சி மாணவன் உயிரை மாய்த்துக் கொண்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ரி1)

# வேறு நோய்கள் இருப்பவருக்கு கொரோனாவால் உயிராபத்து!

*கொழும்பு, ஓக.24*

தொற்று நோய்கள் அல்லா மல் பிற நோய்கள் உள்ளவர் களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டால் அவர்கள் உயிரி ழப்பதற்கு அதிக சாத்தியம் உள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொற்று நோயியல் பிரிவின் தலைமை நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார் என கொழும்பைத் தளமாகக் கொண்ட சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது. உலகம் முழுவதும் ஏற்பட்ட கொரோனா உயிரிழப்புகளை அவதானித் ததில் இந்த விடயம் மிகவும் தெளிவாகத் தெரிகிறது என அவர் மேலும் தெரிவித்துள் ளார். (ரி1)

# தற்போது ரயில்வே திணைக்கள வருமானம் சற்று அதிகரிப்பு


## முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவிப்பு

*கொழும்பு, ஓக.24*

ரயில் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து குறைவடைந்த நிலையில், தற்போது அதன் வருமானம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது என்று ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாளாந்தம் தூரப் பயண சேவையைப் பயன்படுத்தும் பயணிகள் மூலமே அதிகளவான வருமானத்தை ரயில்வே



திணைக்களம் பெற்றுவந்தது. கடந்த காலங்களில் கொரோனாவால் குறைந்து காணப்பட்ட தூர பயணிக ளின் வருகை தற்போது படிப்படி யாக மீண்டும் அதிகரித்துள்ள நிலை யில் வருமானமும் அதிகரித்து வருகின்றது. கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்னரான காலப்பகுதி யில் ரயில்வேத் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் 16 முதல் 18 மில்லியன் ரூபாவுக்கு இடை யில் காணப்பட்டது. கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து, அதன் வருமானம் ஆரம்ப கட்டத் தில் 5 மில்லியன் ரூபாவாகக் குறைவடைந்த நிலையில், தற்போது ரயில்வேத் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் 68 மில்லியன் ரூபாவுக்கு இடையில் காணப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார். (ரி2)

## மஞ்சள் தூளில் கலப்படம்:
# வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஓக.24

மஞ்சள் தூளில் கலப்படம் செய்து விற்பனை செய்து வரும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்படவுள்ளது என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், அண்மையில் நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் மஞ்சள் தூள் உள்ளிட்ட ஏனைய பொருள்களின் மாதிரிகளைப் பெற்று மேற்கொள்ளப்பட்ட



சோதனையில் மஞ்சள் தூளில் கலப்படம் செய்து விற்பனை செய்யப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சந்தையில் தற்போது விற்பனை செய்யப்பட்டு வரும் மஞ்சள் தூள் பாவனைக்கு உகந்தது அல்ல. சில இடங்களில் மஞ்சள் தூளில் இரசாயன பொருள்கள் மற்றும் நிறச்சாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பயன்படுத்தப்படும் இரசாயன பொருள்களால் உடலுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றன. இவை தொடர்பில் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ரி3)

## உருளைக்கிழங்கின் வரி அதிகரிப்பு
### வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஓக.24

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் வரியை அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கிற்கு இறக்குமதி வரி ரூபா 50 இலிருந்து ரூபா 55 ஆக அதிகரிக்கப்படுகிறது என, நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட வியாபார பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வரி அதிகரிப்பு, எதிர்வரும் 4 மாதங்களுக்கு அமுலில் இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளூர் உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு அதிக விலையைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே, இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கிற்கு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## பெறுபேறுகள் கிடைத்தவுடன் வெட்டுப்புள்ளிகள் வெளியீடு

கொழும்பு, ஓக.24

பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கான தேர்ச்சிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் கிடைத்தவுடன் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளை வெளியிடவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், தற்போது பல்கலைக் கழகங்களில் 36 பாடநெறிகளுக்கான தேர்ச்சிப் பரீட்சைகள் நடைபெறுகின்றன என ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ஜனிட்டா லியனகே கூறியுள்ளார். (ரி3)

## அனைத்து நிகழ்வுகளுக்கும் சுகாதார அனுமதி பெறப்படல் வேண்டும்
### சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவிப்பு

சாவகச்சேரி, ஓக.24

கொரோனாத் தொற்று காரணமாக அரசினால் பிறப்பிக்கப்பட்ட சுகாதார விதிமுறைகள் இன்னமும் நடைமுறையில் உள்ளமையால் அனைத்து நிகழ்வுகளும் நடத்த முன்னர் சுகாதாரப் பணியகங்களின் அனுமதி பெறப்படல் வேண்டும் என்று சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

கொரோனா தொற்று அபாயம் இல்லையென சிலர் தவறாகப் புரிந்து கொண்டு ஆலய திருவிழாக்கள் மற்றும் நிகழ்வுகளை சுகாதாரப் பகுதியினரின் அனுமதி பெறாமல் நடத்தவுள்ளமையையிட்டு சுகாதார பிரிவினர் இவ்வாறு அறிவித்துள்ளனர். இதனை மீறுவோர் சுகாதார விதிமுறைகளை மீறியமைக்காக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் எனவும் அறிவித்துள்ளனர்.

ஆலயங்கள் மற்றும் நிகழ்வுகளில் உணவு வழங்குவதற்கு தளர்வு ஏற்படுத்தவில்லை எனவும் அதனை மீறி ஆலயங்களில் அன்னதானம் மேற்கொள்வதும் நிகழ்வுகளில் சமூக இடைவெளி பேணாது உணவுகள் வழங்குவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. .

ஒவ்வொரு நிகழ்விலும் பங்குபற்றுவோர் கட்டாயமாக முகக் கவசம் அணிதல், கை கழுவுதல், சமூக இடைவெளி பேணுதல் போன்றவற்றை கடைப்பிடிக்குமாறும் அறிவித்துள்ளனர். (ரி2-9)

## கிளிநொச்சியில் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி, ஓக.24

கிளிநொச்சியில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இந்த மருத்துவமுகாம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திறன் பயிற்சி நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

காலை 9.30 மணியளவில் ஆரம்பமான குறித்த மருத்துவ முகாமில் கண்பார்வை, சிறுநீரக கோளாறுகளுக்கான பரிசோதனைகள் மற்றும் சத்திர சிகிச்சைகளுக்கான ஏற்பாடும் மருத்துவங்களும், நோயற்ற வாழ்வுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றன. இதில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.(ரி2-6)

## வர்த்தக நிலையங்களில் தீப்பரவல்

கொழும்பு, ஓக.24

எஹலியகொட நகரில் உள்ள இரண்டு வர்த்தக நிலையங்களில் இன்று முற்பகல் தீப் பரவல் ஏற்பட்டுள்ளது. உந்துருளி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் மற்றும் பாதணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றுமே இவ்வாறு தீ விபத்துக்கு உள்ளாகியுள்ளன. தீப் பரவலில் எவ்வித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)



## 14 வயது சிறுவன் வெட்டிக்கொலை:
# இளைஞர்கள் இருவர் கைது இருவர் தேடப்படுகின்றனர்

ஏறாவூர், செங்கலடியில் 14 வயது சிறுவனொருவன் கோஷ்டி மோதலில் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பாடசாலையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தாக்குதலுக்கு இலக்கான அந்தச் சிறுவன் தமது உறவினருடன் தாக்குதல் மேற்கொண்டவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். இதன்போதே சிறுவன் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்துத் தாக்குதலை மேற்கொண்ட 20 மற்றும் 22 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் இரு சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைதான சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)

## சிலாபம் மருத்துவமனையில்
# உயிரை மாய்க்க முயன்ற கைதி

சிலாபம், ஓக.24

சிறைக்கைதி ஒருவர் வைத்தியசாலையில் உயிரை மாய்க்க முயற்சித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. சிலாபம் பொது மருத்துவமனையில் சிறைக் காவலர்கள் இருவரின் கண்காணிப்பில் சிகிச்சைப் பெற்று வந்த விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர் ஒருவர் கழுத்தை அறுத்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.

இதன்போது, காயமடைந்த அவர் தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் எனச் சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சிலாபம் மருத்துவமனையின் 18வது நோயாளர் அறையின் கழிப்பறையில் நேற்று முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர் கடந்த சனிக்கிழமை 22 வயதுடைய யுவதி ஒருவரை கூரிய ஆயுதத்தினால் தாக்கிக் கொலை செய்துள்ளதோடு, பின்னர் விசம் அருந்தி தற்கொலை செய்துகொள்வதற்கு முயற்சித்துள்ள நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (ரி1)

# கொரோனா காவு 8 லட்சம்




உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்ப மான கொரோனாப் பரவல் தற்போது உலகின் 213 நாடுக ளுக்குப் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகி றது.

நேற்றைய நிலவரப்படி, உலகம் முழுவதும் 2கோடியே 34 இலட்சத்து ஆயிரத்து 100 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8 இலட்சத்து 8ஆயி ரத்து 987 ஆக உயர்வடைந்துள் ளது. கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோ ரின் எண்ணிக்கை ஒரு கோடியே 59 லட்சத்து 35 ஆயிரத்து 608 ஆக அதிகரித்துள்ளது. தொற்றுக்குள் ளானோரில் 66 இலட்சத்து 56ஆயிரத்து 505பேர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 61 ஆயிரத்து 675பேர் கவலைக்கிட மான நிலைமையில் உள்ளனர்.

கொரோனாப் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள் ளது. அமெரிக்காவில் இதுவரை 58 லட்சத்துக்கும் மேற்பட்டவர் களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு அடுத்தபடி யாக, அதிகளவானோர் பாதிக் கப்பட்ட நாடாக பிரேஸில் உள்ளது. அந்த நாட்டில் 35 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோ னாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. (ரி1)



## ஜேர்மனிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் நவால்னி

மொஸ்கோ, ஓக.24

ரஷ்யாவின் முக்கிய எதிர்க்கட்சித் தலை வர்களில் ஒருவர் அலெக்சி நவால்னி ஜேர்மனின் பெர்லின் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். ஜனாதிபதி புடினின் அரசையும், அவரையும் கடுமையாக விமர்சித்து வந்த நவால்னி கடந்த புதன்கி ழமை சைபீரியாவில் இருந்து மொஸ்கோ வுக்கு விமானத்தில் பயணம் செய்த போது திடீரென மயங்கி விழுந்தார்.

விமானம் உடனடியாக தரையிறக்கப் பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப் பட்டது. ஆனால், அவர் கோமா நிலைக்குச் சென்றார்.

இதையடுத்து விமான நிலையத்தில் அவர் குடித்த தேநீரில் விஷம் கலக்கப் பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள் ளன. இந்நிலையில், அவருக்கு சிகிச்சை அளிக்க ஜேர்மனி அரசு முன் வந்தது. சைபீரியாவுக்கு அது அவசரமாக மருந் துவ குழுவையும் அனுப்பியது. இதைய டுத்து நாவால்னியை மருத்துவ வசதிகளு டன் கூடிய தனி விமானத்தில் ஜேர்ம னிக்குக் கொண்டு சென்றனர். நவால் னியை வெளிநாட்டுக்கு அனுப்ப முடி யாது என்று மருத்துவமனை நிர்வாகம் தொடர்ந்து மறுத்து வந்தமை குறிப்பி டத்தக்கது. (ரி1)

## தெற்கு சூடானில் விமானம் வீழ்ந்து 17 பேர் உயிரிழப்பு!

ஜூபா, ஓக.24

தெற்கு சூடானில் சரக்கு விமானம் விபத்துக்குள்ளா னதில் அதில் பயணம் செய்த 17 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். வடஆபிரிக்க நாடான தெற்கு சூடானின் தலைநகர் ஜூபாவில் இருந்து அந்த நாட்டு விமா னப்படைக்குச் சொந்தமான சரக்கு விமானம் ஒன்று புறப்பட்டுச் சென்றது.

இந்த விமானத்தில் இரு விமானிகள் உட்பட 18 பேர் இருந்தனர். புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் திடீரென விமானியின் கட்டுப் பாட்டை இழந்த விமானம் விமான நிலையத்துக்கு அருகில் உள்ள குடியிருப்பு பகுதியையொட்டி விழுந்து நொருங்கியது. இந்த விபத் தில் விமானத்தில் பயணம் செய்த 17 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். எனினும் ஒருவர் மட்டும் அதிர்ஷ்ட வசமாக படுகாயங்களுடன் உயிர் தப்பினார். (ரி1)



## சரக்கு கப்பல் - எண்ணெய் கப்பல் மோதியதில் 8 மாலுமிகள் சாவு

பீயிங், ஓக.24

சீனாவில் எண்ணெய்க் கப்பல் ஒன்றும் சரக்குக் கப்பல் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 8 மாலுமிகள் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் ஷாங்காய் நகருக்கு கிழக்கே மஞ்சள் கடலில் 3 ஆயிரம் தொன் பெற்றோலை ஏற்றிக்கொண்டு எண்ணெய் கப்பல் ஒன்று சென்று கொண்டி ருந்தது. யாங்ட்சி நதி முகத்துவாரம் அருகே சென்ற போது மணல் மற்றும் ஜல்லி ஏற்றி வந்த சரக்குக் கப்பலுடன் இந்த எண்ணெய்க் கப்பல் பயங்கரமாக மோதியது. இதில் எண்ணெய் கப்பல் தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்து தொடர் பில் தகவல் கிடைத்ததும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத் துக்கு விரைந்து தீவிர மீட்பு பணியில் இறங்கினர். 15 கப்பல் கள் மற்றும் 2 விமானங்கள் இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத் தப்பட்டன. இந்த விபத்தில் 14 மாலுமிகள் மாயமான நிலையில் 3 மாலுமிகள் மட்டும் பத்திர மாக மீட்கப்பட்டனர். இதனிடையே பல மணி நேர போராட்டத்துக்குப் பிறகு நேற்று முன்தினம் காலை எண்ணெய்க் கப்பலில் தீ முழுவ துமாக அணைக்கப்பட்டது. அத னைத் தொடர்ந்து மீட்புக் குழுவினர் மாயமான மாலுமி களைத் தேடும் பணியில் தீவிர மாக ஈடுபட்டனர். இதில் எண்ணெய்க் கப்பலில் இருந்து 8 மாலுமிகளின் உடல்கள் மீட்கப் பட்டன. இன்னும் 6 மாலுமிகள் காணாமற்போயுள்ளனர். அவர்க ளைத் தேடும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. (ரி1)



## பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு தயாராகும் கமல்...

தமிழ் தொலைகாட்சிகளில் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்ற நிகழ்ச்சி பிக் பாஸ். கமல்ஹாசன் தொகுத்து வழங்கிய இந்நிகழ்ச்சி இதுவரை மூன்று சீசன்கள் முடிந்துள்ளன. வழக்கமாக ஜூன், ஜூலை மாதங்களில் தொடங்கப்படும் இந்நிகழ்ச்சி இந்தாண்டு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது.

விரைவில் பிக்பாஸ் 4ஆவது சீசனுக்கான பணிகள் தொடங்கும் என கூறப்படுகிறது. தற்போது இதற்கான படப்பிடிப்பு அரங்கு கள் அமைக்கும் பணி தொடங்கி நடை பெற்று வருகிறதாம்.

இந்நிலையில், இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் கமல்ஹாசனின் புதிய தோற்றம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகி றது. முறுக்கு மீசை, வெள்ளை தாடியுடன் வித்தியாசமான தோற்றத்தில் இருக்கும் அவரை பிக்பாஸ் நிகழ்ச்சியில் பார்க்க ரசி கர்கள் மத்தியில் ஆர்வம் ஏற்பட்டு உள்ளது.





# வீனஸ், சிலிச் அதிர்ச்சி தோல்வி

நியூயோர்க், ஒக.24

சின்சினாட்டி பகிரங்க சர்வதேச டென்னிஸ் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ், மரின் சிலிச் ஆகியோர் அதிர்ச்சித் தோல்வியடைந்தனர்.

சின்சினாட்டி பகிரங்க சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ரசிகர்கள் இன்றி நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் 25 ஆம் நிலை வீராங்க னையான டயானா யாஸ்ட்ரிம்ஸ்கா (உக்ரைன்) 57, 62, 75 என்ற செட் கணக்கில் முன்னாள் முதன்மை வீராங்கனையான வீனஸ் வில்லி யம்ஸுக்கு (அமெரிக்கா) அதிர்ச்சி அளித்துள்ளார்.

ஆட்டத்தின் போது வலது கணுக்கால் வலியால் யாஸ்ட்ரிம்ஸ்கா அவதிப்பட்ட போதிலும் சிகிச்சை எடுத்துக் கொண்டு தொடர்ந்து விளை யாடி 2 மணி 36 நிமிடங்களில் வெற்றியைப் பறித்தார். மற்றொரு முன்னாள் முதன்மை வீராங்கனை விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்) 62, 63 என்ற நேர் செட் கணக்கில் டோனா வெகிச்சை (குரோஷியா) பந்தாடி னார். இதேபோல் மரியா சக்காரி (கிரீஸ்) 61, 63 என்ற நேர் செட் கணக்கில் உள்ளூர் நட்சத்தி ரம் 16 வயதான கோரி காப்பை விரட்டினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஒலிம்பிக் சாம்பி யன் ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) 76 (6), 36, 61 என்ற செட் கணக்கில் அமெரிக்க வீரர் பிரான் சிஸ் டியாபோவை போராடி தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். காயத்தால் ஓராண்டுக்கு பிறகு களம் திரும்பிய முர்ரே அடுத்து அலெக்சாண்டர் ஸ்வெரேவை (ஜெர் மனி) எதிர்கொள்கிறார். அதேசமயம் முன்னாள் சம்பியனான மரின் சிலிச் (குரோஷியா) 36, 36 என்ற நேர் செட் கணக்கில் டெனிஸ் ஷபோவ லாவிடம் (கனடா) தோல்வியடைந்தார்.(ரி2)

# ஐ.பி.எல். தொடரில் மலிங்க இல்லை



புதுடில்லி, ஒக.24

ஐ.பி.எல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடும் லசித் மலிங்க ஐக்கிய அரபு அமீரகத்துக்கு பயணம் செய்யமாட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. மும்பை அணியின் நட்சத்திர வீரராகத் திகழும் மலிங்க, ஐ.பி.எல் தொடரின் ஆரம்பப் போட்டிகளை தவறவிடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மலிங்கவின் தந்தை உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு அறுவை சிகிச்சை யொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையேற்பட லாம். இதனால், தான் தந்தை யுடன் இருக்க மலிங்க முடிவு செய்துள்ளார். இதன் காரண மாகவே மலிங்க ஆரம்ப ஆட்டங்களில் விளையாட மாட்டார் என்று தெரிய வருகின்றது. எனினும் தனிப் பட்ட காரணங்களால் இம் முறை ஐ.பி.எல். தொடரில் தான் பங்கேற்பது சந்தேகம் என்று மலிங்க தெரிவித்துள் ளார். இருப்பினும் மலிங்க கொழும்பில் தனது பந்துவீச்சு பயிற்சிகளை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல் போட்டிகளில் மலிங்க 170 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். மும்பை இந்தியன்ஸ் அணி கடந்த ஆண்டு நான்காவது கிண் ணத்தை வெல்வதற்கும் மிக முக்கிய காரணமாகத் திகழ்ந் துள்ளார் மலிங்க. (ரி2)

# ஆறாவது தடவையாகவும் சம்பியனானது பேயர்ன் முனிச்

லிஸ்பன், ஒக.24

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் போட்டியில் பி.எஸ்.ஜி. அணியை 10 என்ற கணக்கில் வீழ்த்தி பேயர்ன் முனிச் அணி 6 ஆவது முறையாகவும் சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

கழக அணிகளுக்கிடையிலான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டிகள் போர்த் துக்கலில் நடைபெற்றது. இந்தப் போட்டியின் பேயர்ன் முனிச் (ஜேர்மனி) மற்றும் பி.எஸ்.ஜி. பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்) அரை இறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

இதையடுத்து போர்த்துக்கலின் தலைநகர் லிஸ்ப னில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் இறுதி போட்டி நடைபெற்றது. இதில் 5 முறை சம்பியன் பட்டம் வென்ற பேயர்ன் முனிச் அணியை எதிர்த்து முதல்முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்த பி.எஸ்.ஜி. அணி மோதி யது.

இரு அணிகளுக்கும் கோல் அடிக்க அதிக வாய்ப்பு கள் கிடைத்தபோதும் அவற்றைத் தவறவிட்டன. இதனால் ஆட்டத்தின் முதல் பாதியில் (45 நிமிடங்கள்) இரு அணிகளும் கோல் அடிக்கா மல் 0:0 என்ற கணக்கிலேயே இருந்தன.

இடைவேளைக்குப் பின் போட்டியின் இரண்டா வது பாதி தொடங்கியது. இந்தப் பாதியில் எப்படியாவது கோல் அடித்துவிட வேண்டும் என இரு அணிகளும் தீவிரமாக விளையாடின.

போட்டியின் 59 ஆவது நிமிடத்தில் பேயர்ன் முனிச் வீரர் கிங்ஸ்லி கமன் முதல் கோல் அடித்து அணியினரை உற்சாகத்தில் ஆழ்த்தினார். இதை யடுத்து 1:0 என்ற கோல் கணக்கில் பேயர்ன் முனிச் அணி முன்னிலை பெற்றது. இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத்தொடங்கியது. பி.எஸ்.ஜி. அணி வீரர்கள் தாங்களும் எப்படியாவது கோல் அடித்துவிட வேண்டும் என தீவிர முயற்சி மேற்கொண்டனர். ஆனால் அவர்களால் கோல் அடிக்கமுடியவில்லை. ஆட்டத்தின் 90 நிமிடங் கள் முடிவடைந்த பின்னரும் பி.எஸ்.ஜி. வீரர்க ளால் கோல் அடிக்கமுடியவில்லை. 90 நிமிடங் கள் முடிவடைந்த பின்னர் மேலதிகமாக 5 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. இந்தக் கடைசி 5 நிமிடங்களிலும் பி.எஸ்.ஜி.யால் கோல் அடிக் கமுடியவில்லை. இதனால் பி.எஸ்.ஜி. பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்) அணியை 10 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பேயர்ன் முனிச் (ஜேர்மனி) அணி 6 ஆவது முறையாக ஐரோப் பிய சம்பியன்ஸ் லீக் பட்டத்தை வென்று கிண் ணத்தைத் தட்டிச்சென்றது. (ரி2)



# கைலாசாவை எவராலும் கண்டுபிடிக்க முடியாது

'வெப்கேமரா' சிக்னலை வைத்தெல்லாம் நான் இருக்கும் கைலாசாவை கண்டுபிடிக்க முடியாது என நித்யானந்தா தெரிவித்துள்ளார்.

நித்யானந்தா கைலாசா எனும் தனிநாட்டை உருவாக்கி தினந்தோறும் சமூக வலைதளங்களில் நேரலை மூலமாக புதிய புதிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். இந்நிலையில் கைலாசா நாட்டின் பொருளாதார மேம்பாட்டு அறிவிப்பாக, கைலாசா நாட்டுக்கான நாணயங்கள் மற்றும் பணத்தையும் வெளியிட்டு வைத்தார்.

இதனையடுத்து கைலாசா நாட்டில் ஹோட்டல் வைக்க அனுமதிகோரி மதுரை ஹோட்டல் நிறுவுநர் குமார் என்பவர் நித்யானந்தாவுக்கு கடிதம் ஒன்றை எழுதி வெளியிட்டார். அந்த கடிதம் சமூக வலைதளங்களில் பரவ தொடங்கிய 3மணி நேரத்தில் நேரலையில் தோன்றிய நித்யானந்தா மதுரை ஹோட்டல் அதிபர் குமார் மற்றும் திருச்சி யைச் சேர்ந்த சாரதாஸ் புடைவைக்கடை அதிபர் ஆகியோர் தங்களது தொழில்களை கைலாசாவில் தொடங்க முன்னுரிமை அளிக்க சன்னியாசிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தார்.

தனது நாட்டு பொருளாதார வணிக செயல்பாடு களில் மதுரை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், தான் இறந்தபிறகு தனது சொத்தை மதுரை, திருவண்ணாமலை ஆகிய ஊர்களுக்கு அளிக்க உயில் எழுதி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் நான் திருவண்ணாமலை மலையடிவாரத்தில் பல்வேறு பகுதிகளில் சிசிடிவி கேமரா வைத்து தரிசனம் செய்து வருகிறேன். ஆனால் சிசிடிவி சிக்னலை வைத்து கைலாசாவை கண்டுபிடிக்கலாம் என முயற்சிக்க வேண்டாம். அப்படி கண்டுபிடிக்க இயலாது.

நான் உயிரிழந்த பின் தனது உடலை திருவண்ணா மலை மலையையும், மீனாட்சியம்மன் கோவிலையும் சுற்றிகொண்டுவந்த பின்னரே புதைக்க வேண்டும். கைலாசா நாட்டுகான அங்கீகாரம் கிடைத்தவுடன் நிச்சயமாக தொழில் தொடங்க வேண்டுகோள் விடுத்தவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்திய பிரஜை ஒருவர் தனி நாடு அறிவித்து நாணயங்கள் மற்றும் பொருளாதார அறிவிப்பை வெளியிட்டு நாட்டின் இறையாண்மைக்கு எதிராக செயற்பட்டுவரும் நிலையில் தினசரி நேரலையில் தோன்றும் நிலையில் கூட இந்திய அரசால் ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை என பல்வேறு தரப்பி னரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 24.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.